VEDABHARATHI SEITHIGAL (Tamil Monthly Magazine)
REGD No. : TN/CC(S)DN/571/18-20 RNI No : TNTAM/2016/73726
TN/PM G (CCR) / WPP 605/19-20 / Valid from 28.02.2019 to 31.12.2020






தரமான நகைகளுக்கு
சரியான முகவரி

சூர்யா ஜுவல்லர்ஸ் A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி,
திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார்
கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

Printed Matter


If not delivered please return to
VEDABHARATHY
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.

# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL

Tamil Monthly
தமிழ் மாத இதழ்

| | | | | |
|---|---|---|---|---|
| மலர்:3 | இதழ்:12 | செப்டம்பர்:2019 | ரூ.10/– | வருட சந்தா:ரூ.100/– |
| Volume:3 | Issue:12 | September:2019 | Rs.10/- | Annual Subs: Rs.100/- |



# ஸ்ரீ மஹா மேரு மண்டலி

81/1, மன்னப்பன் தெரு,
கோட்டூர், சென்னை – 600 085.
போன்: 044 – 2447 4744

## ஸ்ரீ மஹா மேரு மண்டலி நடத்தும்

## நவராத்திரி சிறப்பு பூஜைகள்

நாள் :
29.09.2019
முதல்
07.10.2019
வரை

இடம் :
81/1, மன்னப்பன் தெரு,
கோட்டூர்,
சென்னை - 600 085.
044 - 2447 4744

மேலும் தொடர்புக்கு :

**9444075811 / 9444060346**

## பௌர்ணமி விழா

நாள் :
13.10.2019
ஞாயிற்றுகிழமை

நேரம்:
மாலை 3.00 மணி
ஊரப்பாக்கம்

## ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம்

தொடர்பு :
**9551923310**





# இமைப் பொழுதில்
# கண் முன்
# உங்கள் கிரெடிட் கார்டு

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு. வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB TRUST AND EXCELLENCE SINCE 1904

## சிட்டி யூனியன் பேங்க்

www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078
Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

G-2, Vijay Builders, Plot No.24, Kandaswamy Nagar, 9th Cross Street,
Palavakkam, Chennai - 600 041, India.
Mobile : 98407 44400, 94450 73431, 98400 45776
Email : sreedhar.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் அருளுரை தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்

இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்ம**
**அச்வமேத பலம் லபேத்**

என்பது சாஸ்த்ர வசனம்

பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.

### இந்த அறக்கட்டளையின் நோக்கம்

1. அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்
2. கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.
3. நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
4. மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்

***DONATE LIBERALLY TOWARDS CORPUS FUND***


Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39, Millers Road, Kilpauk, Chennai - 600 010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 42.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**




# வேதபாரதி செய்திகள்
**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 3 இதழ்: 12

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்
**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை,
கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

**புத்தகக் குழு**

ஸ்ரீ டி. சூரியநாராயணன்
ஸ்ரீ ஸ்ரீகாந்தன்
ஸ்ரீ G.விஸ்வநாதன், Vly
ஸ்ரீ விஸ்வநாதன், Ngr
ஸ்ரீ K. ராமன்
ஸ்ரீ மணிசங்கர்
ஸ்ரீ சங்கர்
ஸ்ரீ S. கிருஷ்ணமூர்த்தி
ஸ்ரீ M.V. சுப்ரமணியன்
ஸ்ரீ K.N. பத்மநாபன்
ஸ்ரீ சாந்தா நாகராஜன்
ஸ்ரீ K. நாராயணன்
ஸ்ரீ நடராஜன்
ஸ்ரீ K. ஸ்வாமிநாதன்
ஸ்ரீ V. ஸ்ரீராம்

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
**Ph : 94434 95950**
**Email:vedabharathichennai@gmail.com**
**Website: www.vedabharathi.org**


# புத்தகத்தின் உள்ளே


ஒரு நிமிடம் உங்களோடு 4
செப்டம்பர் மாத விசேஷங்கள் 6
அட்டைப்பட விளக்கம் 7
ஸ்ரத்தாஞ்சலி 10
பிரதக்ஷிணம் 13
சுபாஷிதம் 15
சிருங்கேரி ஜகத்குரு மகா ஸ்வாமிகள் அருளியவை 16
பெற்றோர்களே கவனியுங்கள் 17
ஸ்ரீமத் பகவத்கீதை 23
மஹாபெரியவா அற்புத விளக்கங்கள் 26
ஊரப்பாக்கம் ஆவணி அவிட்டம் 27
தர்மத்தின் குரல் 28
எங்கள் குலசாமி 30
பாண்டிச்சேரி ஸமஸ்க்ருத தினம் 33
2019 ஔவை விழா நிகழ்ச்சி 34



**சந்தா விவரம்**

வருட சந்தா ரூ.100
ஆயுள் சந்தா ரூ.1500

சந்தா அனுப்புகிறவர்கள்
**Vedabharathi**
என்ற பெயருக்கு காசோலையை மேற்கண்ட அலுவலக முகவரிக்கு அனுப்பவும். சந்தா புதுப்பிப்பவர்கள் தங்களுடைய சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

வங்கி மூலம் புத்தக சந்தா நன்கொடை வழங்கிட
**VEDABHARATHI**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**

**REGD No : TN/CC(S) / DN / 571 / 18-20**
**RNI No : 1282188**
**Title Code : TNTAM/2016/73726**
**R.Dic.No.1845/2015**
**VEDABHARATHI SEITHIGAL**
**(Tamil Monthly Magazine)**
**1-7th (1st Week) Every Month**
**TN/PM G (CCR) / WPP 605/19-20 / Valid from 28.02.2019 to 31.12.2020**

## ஒரு நிமிடம் உங்களோடு!

"குரு" என்றால் என்ன? உண்மையில் யார் "குரு"? "குரு" வின் தத்துவம் என்ன? "குரு" விற்கும் நமக்கும் உள்ள பந்தம் என்ன? என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த காலத்தில் நம்முடைய பாரதநாட்டில் எழுது பொருட்கள் கிடையாது. ஆனால் ஒருவர் கூறுவதை மற்றவர் காதால் கேட்டு மனதில் நிறுத்தி அதை அனுபவித்து அதை மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுப்பார்கள். அப்படி இருந்த பரம்பரைக்குத்தான் "குரு சிஷ்ய பரம்பரை" என்று பெயர். "குரு" என்றால் அறிவை ஊட்டுபவர் என்று சொல்வோம். உண்மையில் அதன் பொருள் அதல்ல "குரு" என்றால் அனுபவத்தைச் சொல்லிக் கொடுப்பவர் என்றுதான் பொருள். சிஷ்யன் முதலில் குருவிடமிருந்து கேட்டு அதை தன் மனதில் நிறுத்தி பின் அதை அனுபவிக்கிறான். அதன் பின் அவன் அனுபவித்ததை மற்றவர்களுக்கு கூறும்போது அவன் குருவாக மாறிவிடுகிறான்.

அறிவை அனுபூதியாக மாற்றியவர்தான் "குரு" "குரு" என்பதில் இரண்டு எழுத்துக்கள் உள்ளன. கு + ரு இதை சூக்ஷ்மமாக படிக்க வேண்டும். "குரு" என்றால் அறியாமை. இருட்டு என்று பொருள். குகையில் இருட்டு இருக்கும். "கு" என்று நாம் உச்சரிக்கும் போது நம்முடைய உதடுகள் குவிந்து ஒரு குகைபோல் காணப்படும். அதன் உள்ளே இருப்பது அந்தகாரம் அதாவது இருட்டு. அடுத்து "ரு" என்று நாம் உச்சரிக்கும் போது ஒரு Sparkness ஒளி உண்டாகும். "ர" என்னும் எழுத்தை உச்சரிக்கும்போது நம்முடைய நுனி நாக்கு மேல் உதட்டுடன் உரசுகிறது. இரண்டு கட்டைகள் உரசும் போது அங்கு "தீ" வெளிச்சம் உண்டாகிறது. அதுபோல் "குரு" என்று உச்சரிக்கும் போது "கு" Ignorence or darkness ஐயும் "ரு" light ஐயும் குறிக்கிறது. அதாவது இருட்டை வெளிச்சத்தால் போக்குகிறவர் "குரு", 'வியாழன்" கோளுக்கு "குரு" என்று பெயர். கோள்களில் மிகவும் பெரியது "வியாழன்" என்னும் "குரு" தான்.

நம்முடைய ரிஷிகள் பிரக்ஞை-உணர்வைப்பற்றி கூறியுள்ளார்கள். தெய்வம் இல்லை என்பவனாலும், தெய்வம் உண்டு என்பவனாலும், இருவராலும் இல்லை என்று கூற



முடியாது. இருக்கும் வரை இருக்கும் ஸ்நேகம், சுகம், சமாதானம் முதலியவற்றை நாம் அனுபவிக்க வேண்டுமானால் நமக்கு மனது வேண்டும். "குரு" மனதைப்பற்றித்தான் பேசுகிறார். தான் மானசீகமாக உயர்ந்து மற்றவர்களும் உயருவதற்கு உதவுகின்ற மனது உள்ளவர்கள் எல்லாம் "குரு தான் ஸ்ரீமத் பாகவதத்தில் 24 குருமார்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. அதில் பறவைகள், மிருகங்கள் எல்லாம் "குரு" வாக வருகின்றன. நம்முடைய தெய்வங்களான கிருஷ்ணனும், ராமனும், ஐயப்பனும் 'குரு''க்கள் தான். ஐயப்ப ஸ்வாமி காண்பிப்பது சின் முத்திரையைத்தான். அதனால்தான் அவரை "குரு ஸ்வாமி" என்று கூறுகிறோம். இவர்களை நாம் குருவாக பார்ப்பதற்கு பதிலாக சரீரம் உள்ள தெய்வங்களாக பார்க்கிறோம். குரு மார்கள் நமக்கு கோயில்களில் இருக்கும் தெய்வங்கள் எல்லாம் நம்முடைய குருமார்கள்தான் என்று நம் குழந்தைகளுக்குச் சொல்லித்தர வேண்டும். ஸ்ரீமத் பாகவதத்தில் குந்தி தேவி கிருஷ்ணனைப் பார்த்து பாடும் போது

"யோகிகளுக்கெல்லாம் ஈஸ்வரனே, யாவருக்கும் குரு வானவனே, ஹே பகவானே தங்களுக்கு நமஸ்காரம்" என்கிறாள். தம் முன் தோன்றிய நரசிம்ம மூர்த்தியைப் பார்த்து பிரகலாதன் கூறுவது "த்வம் அகில குரு" என்று தான் ஸ்ரீகிருஷ்ணனைப் பார்த்துக் கொண்டு நாரதர் தர்மபுத்திரரிடம் ''இந்த கிருஷ்ணனை நீங்கள் "குரு" வாக பார்க்க வேண்டும் என்கிறார்.

"குருர் ப்ரம்மா குருர் விஷ்ணு குருர் தேவோ மஹேஸ்வர"

ஞானத்தால் உயர்ந்து நாமும் ஒரு நாள் குருவாக வேண்டும்.

- டி. சூரியநாராயணன்

**ஜாதக பரிவர்த்தனைக்கு அணுகவும் :**

எண்.9, பழனி ஆண்டவர் தெரு,
ராதாநகர், குரோம்பேட், சென்னை - 600 044.

| திருமதி. தனலட்சுமி | திருமதி. ராஜலட்சுமி |
|---|---|
| 9444140119 | 7092199447 |

## செப்டம்பர் மாத விசேஷங்கள்

### (செப்டம்பர் 1/2019 முதல் செப்டம்பர் 30/2019 வரை)

| தேதி | கிழமை | விசேஷம் |
|---|---|---|
| 2 | திங்கள் | விநாயகர் சதுர்த்தி, ஸாம வேத உபாகர்மா |
| 3 | செவ்வாய் | ரிஷி பஞ்சமி, மஹாலக்ஷ்மி விரதம் |
| 7 | சனி | லக்ஷ்மி ஆவாகனம் கேதார விரதம் ஆரம்பம் |
| 9 | திங்கள் | சபரிமலை நடை திறப்பு மாலை 5 மணிக்கு (ஓணப்பண்டிகை) ஏகாதசி |
| 10 | செவ்வாய் | வாமன ஜயந்தி |
| 11 | புதன் | பிரதோஷம், ஓணப்பண்டிகை |
| 13 | வெள்ளி | சபரிமலை நடை அடைப்பு, பௌர்ணமி உமாமஹேஸ்வர விரதம் |
| 14 | சனி | மஹாளய பட்சம் ஆரம்பம் |
| 15 | ஞாயிறு | புன்னை நல்லூர் மாரியம்மன் தேர் |
| 16 | திங்கள் | சபரிமலை நடை திறப்பு மாலை 5 மணிக்கு |
| 17 | செவ்வாய் | சங்கடஹர சதுர்த்தி, புரட்டாசி மாத பிறப்பு |
| 21 | சனி | சபரிமலை நடை அடைப்பு |
| 25 | புதன் | ஏகாதசி ஸன்யஸ்த மஹாளயம் |
| 28 | சனி | ஸர்வ மஹாளய அமாவாசை |
| 29 | ஞாயிறு | நவராத்திரி ஆரம்பம் |

**வாசகர்களின் அன்பான கவனத்திற்கு**

வாசகர்களின் பேராதரவினால் **"வேதபாரதி செய்திகள்"** பத்திரிகை இந்த மாதத்துடன் ஐந்து ஆண்டுகளை முடித்து வரவிருக்கும் அக்டோபர் 2019 இதழில் **ஆறாவது ஆண்டில்** அடி எடுத்து வைக்கிறது.

அக்டோபர் 2019 இதழ் முதல் "வேதபாரதி செய்திகள்" பத்திரிகை புது பொலிவுடனும், ருசியான பல புதிய கட்டுரைகளுடன் வெளிவரவிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**வாசகர்கள் தொடர்ந்து ஆதரவளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

ஆசிரியர்.

5 bye bye Completed — Next Month Celebrating 6 YEARS ANNIVERSARY



## அட்டைப்பட விளக்கம்
## "வாமன ஜயந்தி"

**" நல்லவர்களைக் காப்பதற்கும், தீயவர்களை அழிப்பதற்கும் தர்மத்தை நிலைநாட்டவும் நான் யுகங்கள் தோறும் அவதரிப்பேன்"**



இது பகவானின் கீதாசாரம். உலகில் அவர் எத்தனையோ அவதாரங்களை எடுத்திருக்கிறார். அதில் மிக முக்கியமானது 10 அவதாரங்கள். அதில் ஐந்தாவதாக வருவது "வாமன அவதாரம்". இந்த அவதாரம் எடுக்க பகவானின் நோக்கம் என்ன?

பிரஹலாதனின் பேரனான ''மஹாபலி'' அசுரர் குலத்தில் பிறந்திருந்தாலும், நீதி நெறி தவறாது தர்மத்தை கடைபிடித்த ஒரு சிறந்த சக்ரவர்த்தியாக வாழ்ந்து வந்தான். சிறந்த விஷ்ணு பக்தன். இவனுக்கு அருள்புரியவே பகவான் மஹாவிஷ்ணு "வாமன" அவதாரம் எடுத்தார். புரட்டாசி மாதம், சுக்ல பட்க்ஷம், திருவோண (சிரவண) நட்சத்திரத்தில் முதல் அம்சமான அபிஜித் பாதத்தில் சூரியன் நடுப்பகலில் பிரகாசிக்கும் நேரத்தில் கச்யபருக்கும் அதிதிக்கும் புத்திரனாக அவதரித்தார். கிருஷ்ணாவதாரத்தில் பகவான் குழந்தையாக பிறந்து பிறகு சங்கு சக்ர கதா ரூபத்தில் தோன்றினார். ஆனால் வாமன அவதாரத்தில் பிறக்கும் போதே சங்கு சக்ர கதா ரூபத்தில் தோன்றி பிறகு உடனே ஒரு பிராமண சிறுவனாக மாறுகிறார். கச்யபரும், அதிதியும் மஹரிஷிகளை அழைத்து வைதீக கர்மாக்களைச் செய்து "வாமனன்" என்று பெயர் சூட்டினார்கள். மஹரிஷிகள் ஸ்ரீபகவானுக்கு 5வது வயதில் உபநயனம் செய்து வைத்தார்கள். (ஸ்ரீமத் பாகவதத்தில் 8வது ஸ்கந்தத்தில், 18-ம் அத்தியாயத்தில் ஸ்லோகம் 14 முதல் 19 வரை இந்த உபநயனம் குறித்து விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

காயத்ரி மஹா மந்திரத்திற்கு தேவதையான ஸூர்ய பகவான் வாமனருக்கு காயத்ரி மந்திரத்தை உபதேசித்தார்.

பிருஹஸ்பதி ப்ரம்மஸூத்திரம் என்னும் பூணுலை கொடுக்கிறார். கஸ்யப்பிரஜாபதி முஞ்சிக்கயிற்றை வாமனரின் இடுப்பில் கட்டுகிறார். பூமாதேவி மான்தோலை போர்த்துகிறாள். மூலிகை களின் பதியான "சந்திரன்" பலா தண்டத்தைக் கொடுத்தார். தேவதை ''குடையை'' கொடுத்தார். வேத வித்துக்கள் எக்காரியத்தையும் செய்யும் முன் ஆசமனம் செய்ய வேண்டும். வேதத்தின் இருப்பிடமான "பிரம்மதேவன்" கமண்டலுவைக் கொடுத்தார். சப்தரிஷிகள் குசத்திலான (தர்ப்பை புல்) ஆசனத்தை கொடுத்தார்கள். ருத்ராக்ஷ மாலையை சரஸ்வதி தேவி நேரில் அளிக்கிறார். பிக்ஷை வாங்குவதற்காக பிக்ஷா பாத்திரத்தை "குபேரன்" கொடுக்கிறான். ஸர்வேஸ்வரனான பரமசிவனின் பத்தினியான அந்த லோகமாதாவான அன்னபூர்ணியே நேரில் வந்து வாமனருக்கு பிக்ஷை இடுகிறாள். அதன் பிறகு வாமனன் தனது வைதீக கர்மாக்களைத் தவறாது செய்துவந்தான்.

தன் பெற்றோர்களின் அனுமதியோடு நர்மதை நதிக்கரையில் யாகம் செய்து கொண்டிருந்த பலிச்சக்ரவர்த்தியின் யாகசாலையை அடைந்து மூன்று அடி நிலம் கேட்கிறார். மூன்றாவது அடிக்கு இடம் இல்லை என்றதும் பலிச்சக்ரவர்த்தி பகவான் முன் குனிந்து நின்றதும் பகவான் தன்னுடைய பாதத்தை மஹாபலியின் சிரஸில் வைத்து அழுத்தி பாதாள லோகத்திற்கு அனுப்பியதாக புராணங்கள் கூறுகின்றன. ஆனால் ஸ்ரீமத் பாகவதத்திலோ அல்லது ஸ்ரீமன் நாராயணீயத்திலோ பகவான் தன்னுடைய காலை மஹாபலியின் சிரசில் வைத்து அழுத்தியதாக கூறப்படவில்லை.

மஹாபலி தன் சிரசைக் காண்பித்து "ஹே பகவான் மூன்றாம் அடிக்கு என் சிரசின் மீது தங்கள் காலடியை வைக்கலாம், அதனால் ஏற்படும் எல்லா விளைவுகளையும் நான் ஏற்றுக் கொள்ள சித்தமாக இருக்கிறேன்'' என்று கூறி பகவானிடம் சரணடைகிறான். இதைக் கேட்ட பகவான் அங்கு கூடியிருந்தவர்களிடம் "என்னை சரணடைந்தவர்களை நான் ஒரு போதும் கைவிடமாட்டேன். தான் செய்யப்போகும் தான



தர்மத்தால் தனக்குப் பதவிபோகும், பல துன்பங்கள் வரும் என்று அவனுடைய குலகுரு சுக்கிராச்சார்யர் சொல்லியும் மஹாபலி தன் உறுதியை கைவிடவில்லை. தேவர்களும், முனிவர்களும் அடைய முடியாத சிரேயஸ்ஸை மஹாபலி அடைந்துவிட்டான்'' என்று கூறி அவனை ஆட்கொண்டார்.

இந்த வருடம் **வாமன ஜயந்தி 10.09.2019, செவ்வாய்கிழமை** நிகழ்கிறது. அன்றைய தினம் வாமனர் படத்திற்கு பூஜை செய்து ஸ்ரீமத் பாகவதத்தில் 8வது ஸ்கந்தத்தில் 18-ம் அத்தியாயத்தில் உள்ள வாமன அவதாரத்தை பக்தி சிரத்தையுடன் பாராயணம் செய்பவர்கள் நிச்சயம் பகவானுடைய அனுக்கிரஹத்திற்கு பாத்திரமாவார்கள்.

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**


உ
குருவே சரணம்

**வேதபாரதி**

**(பாரதப் பண்பாட்டு அமைப்பு)**

## நவராத்திரி கொலுப்போட்டி

வேதபாரதி அமைப்பின் சார்பாக நங்கநல்லூர் சுற்றுப்பகுதிகளில் நவராத்திரி கொலு வைப்பவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக கொலுப்போட்டி நடக்க உள்ளது.

நவராத்திரி கொலுப்போட்டியில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் தங்கள் வீட்டு விலாசம், லேண்ட் மார்க் பதிவு செய்யலாம். பதிவு செய்ய கடைசி நாள் **29.09.2019. நடுவர்கள் கொலுவை பார்வையிடுவார்கள்**

தொடர்புக்கு : **7397291043 / 9445102193**



புத்தக வடிவமைப்பு

**ரெம்ஸ் பிரிண்ட்ஸ்**

1, லட்சுமிநகர், 100 அடி சாலை, வேளச்சேரி, சென்னை - 42.

செல்: 8939000064

## முக்தியடைந்த பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகளுக்கு ஸ்ரத்தாஞ்சலி



பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் 29.07.2019 அன்று விடியற்காலை 1.00 மணிக்கு சித்தியடைந்தார். கடந்த 15.08.2019 வியாழக்கிழமையன்று மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரை ஸ்வாமிகளுக்கு, மேற்கு மாம்பலம் கோ தர்ம சாலையில் வேதபாரதியின் சார்பாக **''ஸ்ரத்தாஞ்சலி''** செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் மஹா மஹோபாத்யாய முல்லைவாசல் பிரம்மஸ்ரீ டாக்டர்.கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், மாதுஸ்ரீ பிரேமா கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், டாக்டர் ஸ்ரீ மணி த்ராவிட் சாஸ்திரிகள், மதுரை ஸ்ரீ ரமணபாரதி சைதன்ய ஜி (ஸ்ரீ கிருஷ்ண ஜகந்நதான் ஜி) அவர்களும், ஸ்வாமிகளுடன் அனேக வருடங்கள் நெருங்கி பழகிய ஸ்ரீ சத்திய மூர்த்தி, ஸ்ரீ ரமேஷ் அவர்களும் மற்றும் ஏராளமான வேதபாரதி உறுப்பினர்களும் கலந்துக் கொண்டார்கள். முதலில் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் பேசிய அனைவரும் ஸ்வாமிகள் வாழ்ந்த எளிமையான வாழ்க்கைக் குறித்தும், ஒரு சந்நியாசியாக அவர் செய்த பல நற்தொண்டுகள் குறித்தும், வேதாந்தத்தில் அவருக்கு இருந்த ஆழ்ந்த ஞானம் குறித்தும், ஆதிசங்கரர் மீது அவருக்கு இருந்த ஆழ்ந்த பக்தி குறித்தும் பேசினார்கள். ஸ்வாமிகள் பூர்வாஸ்ரமத்தில் சென்னை ஐ.ஐ.டி-யில் பேராசிரியராக பணியாற்றிய போது அவருடன் நெருங்கி பழகியவர்களில் ஒரு சிலர் நிகழ்ச்சிக்கு வந்திருந்தார்கள். அவர்கள் பேசும் போது ஸ்வாமிகளுக்கு கணிதத்திலும் விஞ்ஞானத்திலும் இருந்த ஞானம் குறித்து நினைவு கூர்ந்தார்கள். ஸ்ரீ கிருஷ்ண ஜகந்நாதன் ஜி பேசும் போது ஸ்வாமிகளின் நீண்ட நாள் விருப்பமான ஸ்ரீ



ஆதிசங்கரர் ஜயந்தியை வேதபாரதி சிறப்பாக நடத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். மாதுஸ்ரீ பிரேமா கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் பேசும் போது ஸ்வாமிஜி சாமான்ய தர்மங்களை ஜனங்கள் மனதில் ஆழமாக பசுமரத்து ஆணிபோல் பதியவைத்தார் என்று கூறி இப்பேர்பட்ட மஹானை இழந்துவிட்டு நிற்கிறோமே என்று கூறும்போது அவரது கண்கள் குளமாயின.

அடுத்து பேசிய டாக்டர் ஸ்ரீ மணி த்ராவிட் சாஸ்திரிகள் ''ஸ்வாமிகள் சென்னை வரும்போதெல்லாம் அவருக்கும் எனக்கும் அநேக நாட்கள் அவித்தை வித்தை குறித்து விவாதங்கள் நடந்துள்ளது. ஆரம்பத்தில் அவருடைய வாதங்களை நான் ஏற்றுக்கொள்ள வில்லை. ஆனால் அவருடன் பழக பழக பாஷ்யகாரர்களிடம் அவருக்கு இருந்த பக்தியை நான் பலதடவை கவனித்தேன். கடோபநிஷத்தில் ஒரு மந்த்ரம் வருகிறது. அதில் ஒரு வரி "அனன்ய ப்ரோக்தே கதிரத்ர நாஸ்தி.... அதாவது ''ஆன்மாவை அனுபூதியில் அறிந்தவன் சரியான வழியைக் காட்டுவான்'' என்பது பொருள். அதன் பிறகு எனக்கு ஸ்வாமிகளிடம் ஒரு ஈடுபாடு வந்துவிட்டது. அவருடைய "வேதாந்த ப்ரபோதம்" என்ற புத்தகம் சமீபத்தில் தமிழில் வெளிவந்துள்ளது. அதை இந்தியிலிருந்து தமிழாக்கம் செய்யும் பாக்யம் எனக்குக் கிடைத்தது" என்று கூறி ஸ்வாமிகளுக்கு ஸ்ரத்தாஞ்சலி செலுத்தினார்.

கடைசியாக பேசிய பிரம்மஸ்ரீ டாக்டர்.கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் தான் பல சந்தர்ப்பங்களில் ஸ்வாமிஜியுடன் நெருங்கி பழகியதாகவும் அப்போதெல்லாம் ஸ்வாமிஜி வேதாந்தத்தையும், விஞ்ஞானத்தையும் ஒப்பிட்டு மிக ஆழமாக விவாதிப்பார் என்பதை நினைவு கூர்ந்தார். எல்லோரும் சந்த்யாவந்தனத்தை தவறாமல் செய்ய வேண்டும். எல்லா ஸ்லோகங்களையும் சொல்ல வேண்டும் என்பதற்கு ஏராளமான சபைகளை நடத்தியிருக்கிறார். மேலும் மஹா பெரியவாளின் பரம சித்தாந்தம், போட்டோ எடுக்கக்கூடாது என்பது அதை

ஸ்வாமிஜி தன் வாழ்க்கையிலும் கடைபிடித்தார் என்று கூறி ஸ்வாமிகளுக்கு அஞ்சலி செலுத்தினார்.

வேதபாரதியின் செயலாளர் ஸ்ரீ ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் தம்முடைய நன்றியுரையில் ஸ்வாமிஜி சித்தியடைந்த அதிர்ச்சி செய்தியைக் கேட்டதும் தான் அடைந்த துயரத்தையும், ஸ்வாமிஜிக்கு அஞ்சலி செலுத்த ஹுப்லிக்கு தான் சென்ற அனுபவத்தையும் விளக்கி பேசி, 20 வயதிற்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு வேதாந்தத்தை கொண்டு செல்ல ஸ்வாமிஜியின் எழுத்துக்களும் சொற்களும் மிகப்பெரிய அடிதளமாக அமையட்டும் என்று கூறினார்.

நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைவரும் ஸ்வாமிஜியின் திரு உருவ படத்திற்கு புஷ்பம் சமர்ப்பித்து அஞ்சலி செலுத்தினார்கள். ஸ்வாமிஜியின் ப்ரசாதத்துடன் நிகழ்ச்சி பக்திபூர்வமாக நடந்தேறியது.

தொகுப்பு : **ஆசிரியர்**

நங்கநல்லூரில் இயங்கும் ராதா கல்யாண மகோத்ஸவ சேவா கமிட்டி சமீபத்தில் கோகுலாஷ்டமி கொண்டாட்டத்தின் ஓர் பகுதியாக குழந்தைகளுக்கு வண்ணம் தீட்டுதல், மாறுவேடப்போட்டி மற்றும் பாட்டு போட்டிகள் ஆகியவற்றை நடத்தினர். வேதபாரதி செயலாளர் திரு.வெங்கட்ராமன், மேஜர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் திரு.சுதர்சன் ஆகியோர் கலந்துகொண்டு பரிசுகளை வழங்கினார்கள்.






## பிரதக்ஷிணம்

கோயில்களில் தெய்வங்களை வணங்கியபிறகு கோயிலை மூன்று முறை சுற்றிவருவது ஒரு மரபாகும். இதைத்தான் ‘பிரதக்ஷிணம்‘ என்பார்கள்.

**‘வேதபாரதி செய்திகள்‘** வாசகர்களுக்காக மாதம் ஒரு அதிசயம் நிறைந்த கோயிலை **‘பிரதக்ஷிணம்‘** செய்து வருகிறோம். இதுவரையிலும் 9 கோயில்களுக்கு அழைத்துச் சென்று பிரதக்ஷிணம் வந்துள்ளோம்.

இந்த மாதம் பிரதக்ஷிணம் பத்தாவது அதிசய கோயிலுக்கு செல்வோமா!!!

### பிரதக்ஷிணம் (10)
### மூச்சுவிடும் நரசிம்ஹர்



இந்த அதிசய கோயில் தெலுங்கானா மாநிலம், நல்ல கொண்டா மாவட்டத்தில் உள்ள “வாடபல்லி” என்கிற ஊரில் உள்ளது.

சிவபெருமானின் உத்தரவின்படி அகத்திய முனிவர் இமயத்திலிருந்து தென்திசை நோக்கி வந்துகொண்டிருந்த போது

கிருஷ்ணா மற்றும் மூசி ஆகிய இரு நதிகளும் இணையும் இடத்தில் தங்கினார். அப்போது அவருக்கு ஒரு அசரீரி "அகத்தியரே இரு நதிகள் சங்கமிக்கும் இந்த இடத்தில் நரசிம்ஹரின் விக்ரஹம் உள்ளது. இதை இந்த இடத்தில் பிரதிஷ்டை செய்தபின் தங்களுடைய யாத்திரையை தொடருங்கள்" என்றது. அகத்தியர் சைவராயினும் இறைவனின் கட்டளையை ஏற்று அந்த நரசிம்ஹ சிலையை தேடி கண்டுபிடித்து ஒரு சிறிய கோயிலில் பிரதிஷ்டை செய்தார். ஆனால் நாளடைவில் அந்த கோயில் சிதலமடைந்து அந்த விக்ரஹம் மீண்டும் பூமியில் புதைந்து விட்டது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு ரெட்டி ராசுலு என்பவர் இந்த இடத்தில் ஒரு நகரத்தை உருவாக்க ஆங்காங்கு பள்ளம் தோண்டியபோது அந்த நரசிம்ஹ விக்ரஹம் மீண்டும் வெளிப்பட்டது. அவர் 1377-ல் இங்கு ஒரு கோயில் கட்டி அதில் நரசிம்ஹரை பிரதிஷ்டை செய்து வழிபாட்டை துவங்கினார். கோயில் அர்ச்சகர் பூஜை செய்ய ஆரம்பித்த போது நரசிம்ஹரிடமிருந்து மூச்சு வெளிப்படுவதை அறிந்தார். அதை சோதிப்பதற்காக அவர் மூக்கின் அருகில் ஒரு ஏற்றிய விளக்கைக் காண்பித்தார். அப்போது அந்த விளக்கின் சுடர் அசைந்தது. அதே நேரம் விக்ரஹத்தின் பாதம் அருகில் ஏற்றி வைத்த தீபம் நிலையாக அசையாமல் எரிந்தது. நரசிம்ஹமூர்த்தி இரண்யனை வதம் செய்தபோது இருந்த உக்ரரூபத்தோடு இங்கு எழுந்தருளியுள்ளதாக ஐதீகம். இன்றும் இந்த விளக்குகள் இவ்வாறு எரியும் அதிசயத்தைக் காணலாம்.

ஆந்திராவில் உள்ள நல்கொண்டாவிலிருந்து 73 கி.மீ. தூரத்தில் மிரியாலக்குடா என்னும் ஊர் வரும். அங்கிருந்து பிரியும் சாலையில் 2 கி.மீ. தூரத்தில் வாடபல்லி நரசிம்மர் கோயில் உள்ளது. காலை 7 மணி முதல் 11 மணி வரையும், மாலையில் 6 மணி முதல் 7 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கும்.

பிரதக்ஷிணம் தொடரும்...

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**



# சுபாஷிதம் - 10

"சுபாஷிதம்" என்பது சொல்வதற்கு இனிமையான ஸ்லோகங்கள். இத்தகைய ஸ்லோகங்களின் பொருள் எவரையும் கவரும். சிறு குழந்தைகளுக்கு இத்தகைய நல்லுரைகளை கற்றுத்தருவதால் எதிர்காலத்தில் அந்த மாணவனின் மனவளம் செம்மையாக அமைவதோடு அவன் பலருக்கு வழிகாட்டியாக எடுத்துக்காட்டாக விளங்குவான்.

**1. கோகிலானாம் ஸ்வரோ ரூபம்**
**பாதிவ்ரத்யந்து யோஷிதாம்**
**வித்யா ரூபம் விரூபாணாம்**
**க்ஷமா ரூபம் தபஸ்வினாம்**

பொருள் : குயிலுக்கு குரல் அழகு, பெண்ணிற்கு கற்பு அழகு, அழகற்றவனுக்கு கல்வி அழகு, தவம் செய்பவனுக்கு பொறுமை அழகு.

**2. குணைருத்தமதாம்யாதி நோச்சைராஸனஸஸ்தித:**
**ப்ராஸாத ஷிகரஸ்தாபி காக: சிம் கருடாயதே/**

பொருள் : ஒருவனின் குணம் அவன் தரத்தால் அறியப்படுமேயன்றி பதவியால் அல்ல. அரண்மனையின் சிகரத்தில் அமர்ந்திருக்கும் காக்கை கருடனாகுமா?

**3. வித்யா மித்ரம் ப்ரவாஸேஷு**
**பார்யா மித்ரம் க்ருஹேஷு ச**
**ரோகினாம் ஔஷதம் மித்ரம்**
**தாமோ மித்ரம் ம்ருதஸ்ய ச**

பொருள் : பயணம் செய்பவனுக்கு கல்வி நண்பன், இல்லத்தில் மனைவி நண்பன், நோயுற்றவனுக்கு மருந்து நண்பன், மரணத்துக்கு அப்பால் தர்மம் நண்பன்.

தொடரும்....

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்**

என்றும் ஆன்மீக பணியில் :
**பிரம்மஸ்ரீ முனிஸ்வர ஸாஸ்திரிகள்**
ஸ்தாபகர் ஸ்ரீ வித்யா ஸ்தானம் ட்ரஸ்ட், சென்னை.

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## இறைவனின் செயல்களில் குறையில்லை



சாலையோரத்தில் நடந்து சென்று கொண்டிருந்த ஒருவன், ஒரு மெல்லிய பரங்கிக் கொடியைப் பார்த்தான், "இந்த மெல்லிய கொடிக்கு இவ்வளவு பெரிய பழத்தைக் கொடுத்த இறைவன், எவ்வளவு கொடுரமானவனாக இருக்க வேண்டும்?'' என்று அவன் சொல்லும் போது, ஒரு வேப்ப மரத்தைப் பார்த்தான். அதனடியில் சிறிது நேரம் இளைப்பாறினான் அவன், அதன் சிறிய பழத்தைப் பார்த்ததும் அவன், ''உண்மையில் இறைவன் பைத்தியமாகத்தான் இருக்க வேண்டும். இந்தப் பெரிய மரத்திற்கு இவ்வளவு சிறிய பழத்தைக் கொடுத்திருக்கிறானே'' என்று நினைத்தான். அவன் அவ்வாறு சிந்திப்பதற்குள் ஒரு வேப்பம்பழம் அவன் கண் இமையின் மேல் விழுந்தது. சிறியதாக இருந்த காரணத்தால், அது அவனுக்கு லேசான வலியைத்தான் உண்டாக்கியது. உடனே அவன் தன் தவறை உணர்ந்து, "நான் யோசிக்காமல் இறைவனை நிந்தித்துவிட்டேன். இறைவன் இந்த மரத்திற்கு பெரிய பரங்கிக்காயைக் கொடுத்திருந்தால் என் நிலைமை இப்பொழுது என்னவாகியிருக்கும்? இந்த மரத்திற்கு ஒரு சிறிய பழத்தையும், அந்த மெல்லிய கொடிக்கு பெரிய பரங்கிக் காயையும் கொடுத்த-தாலேதான் நான் இந்த சிறிய வலியோடுதப்பித்தேன்" என்று எண்ணினான்.

ஓர் இராஜாவிற்கு மிகவும் பக்தியுள்ள ஒரு மந்திரி இருந்தான். அவன் எப்பொழுதும் "இறைவன் செய்வது எல்லாமே நமது நன்மைக்கே" என்று சொல்லிக் கொண்டே இருப்பான். ஒரு நாள் ராஜா, ஏதோ வேலையில் ஈடுபட்டிருக்கும் போது தனது கைவிரலை வெட்டிக் கொண்டு விட்டதால், வலியால் மிகவும் துடித்துப் போனார். அப்பொழுது இராஜா மந்திரியை வரவழைத்து, "இதுவும் என் நன்மைக்காகத்தான் என்றா சொல்கிறாய்?" என்று கேட்டார். அதற்கு மந்திரி, "ஆமாம்" என்று கூறினான். இதைக் கேட்டுக் கோபமடைந்த ராஜா மந்திரியைச் சிறையில் அடைத்தான்.

தொடரும்....



# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

**காந்தலக்ஷ்மி சந்திரமௌலி** பாகம் - 2 பகுதி - 37

முதலில் குழந்தைகளிடம் "காதல் பிரச்சினை' என்பதை அணுகும் போது உங்கள் மொழியில் பேசாதீர்கள். அந்த வயதிற்குரிய மொழி என்ற ஒன்று உண்டு. அதை மட்டுமே பேசுங்கள். "இதென்ன புதுக்கதை எங்கள் மொழி, மற்றும் உங்கள் மொழி" என்று நீங்கள் புருவத்தை நெரிப்பது தெரிகிறது.

அதாவது நான் முன்பே கூறியபடி, "முளைச்சு மூணு இலை விடலை, லவ்வு என்னடா லவ்வு, மார்க் வாங்க துப்பில்லை' என்று பெற்றோர்களுக்கே உரிய மொழி ஒன்று இருக்கிறதல்லவா, அதை உபயோகிக்காதீர்கள்.

ஏனெனில், இத்தகைய வார்த்தைகள் அவர்களின் ஈகோவை தூண்டும். வெறுப்பு தோன்றும். அழும் வயதில்லை என்பதால் மனதில் கோபக்கனல் எரியத் துவங்கும்.

அச்சமயத்தில் யார் தேனாக உருகிப் பேசுகிறார்களோ அவர்களை தன் தலைவனாக, மென்டாராக ஏற்றுக் கொண்டு விடுவார்கள்.

**"அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்**
**அஃதறி கல்லா தவர்"**

**(அதிகாரம் - 43 (அறிவுடைமை) குறள் - 427)**

"அறிவுடையவர்கள் எதனால் எது வரும் என்று பின்னால் வரக்கூடியதை முன்பே யோசித்தறிந்து எச்சரிக்கை செய்வார்கள். அவ்வகையில் முன்யோசனை செய்யத் தெரியாதவர்கள் அறிவற்றவர்கள்" என்கிறார் வள்ளுவர் பெருமான்.

இந்த முன் யோசனை, அறிவுச்சார்ந்த பார்வை, தெளிவானப் பேச்சு இன்றைய பெற்றோர்களுக்கு தேவை. அதைவிட மிக முக்கியமாக தான் எதைக் கூறுகிறோமோ அதை முதலில்

பெற்றோர்கள் பின்பற்ற வேண்டும்.

'காதல்', பாய் ஃபிரண்டு / கேர்ள் ஃபிரண்டு எனும் வார்த்தைகள் காதில் விழுந்ததுமே பதறுவது, கோபமாகப் பேசுவது ஆகியவற்றை தவிர்த்துவிடுங்கள்.

உங்களை நிதானப்படுத்திக் கொள்ளுங்கள். உங்களிடம் கிடைக்காத அரவணைப்பு, தோழமை, அமைதி ஆகியவை வெளியிடத்தில் முகமறியாத ஒருவரிடமிருந்து கிடைத்துக் கொண்டிருக்கிறது என்பதை உணருங்கள்.

"உடலில் ஏற்படக்கூடிய வேதியல் மாற்றங்கள் உன்னைத் தாக்கும் காலகட்டம், உன் உடலில் மாற்றம், உன் சிந்தனையில் மாற்றம், உன் பார்வையில் மாற்றம், நடை, உடை, பாவனையில் மாற்றம், உன் பேச்சில் மாற்றம் எல்லாம் இயற்கை தான். ''உன்னையே பார்க்குறாடா'' என்று உன் நண்பர்கள் உசுப்பேத்துவார்கள். அதை நம்பி நீயும் 'லவ்' என்கிறாய். இதன் பெயர் 'ஈர்ப்பு' மட்டுமே. காதல் எனும் பெரிய மாயையை உன்னால் கையாளும் வயது உனக்கில்லை. நீ சாதிக்க வேண்டியது நிறைய உள்ளது. சாதித்துக்காட்டு" என்று கூறுங்கள்.

கடைசி அஸ்திரமாக, "உன் தங்கைக்கும் இதே வயது இன்னும் இரண்டு வருடங்களில் வந்துவிடும். நம் குடும்பத்தில் நாம் என்ன செய்யலாம்? அவரும் 'லவ்' பண்ணட்டும் என்று விட்டு விடலாமா?" என்று கேட்க வேண்டும்.

பெண் குழந்தையாக இருந்தால் இதே பேச்சு தான் என்றாலும், மேலும் பக்குவம் வேண்டும். மெதுவாக கை வேலைகள், கிராப்ட்ஸ் என்று கவனத்தை திருப்ப வேண்டும்.

குரலில் மென்மையும், கண்டிப்பும் நிச்சயம் தேவை. உங்கள் கோபமும் படபடப்பும் உங்கள் பயத்தை அவர்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டும் என்பதை புரிந்து செயல்படுங்கள்.

அடுத்து பெற்றோர்கள் நடைமுறைக்கு கொண்டு வர வேண்டிய விஷயம் மிக முக்கியமானது.

அது என்ன என்று 'வேதபாரதி'க்கு கீழ்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும். 9443495950.

தொடரும்....



20th year of dedicated SELFLESS SERVICE

# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"


V.KRISHNAMOORTHY
Managing Trustee


P.AKASHRAM
Executive Trustee




ஏழை புற்றுநோயாளிகளை காக்கும் மாபெரும் பணியை **இருபதாவது ஆண்டாக வெற்றிகரமாக தொடர்ந்து கொண்டு இருக்கும் ஸ்ரீ மாதா டிரஸ்ட்,** தனது சேவை பயணத்தின் ஒவ்வொரு அடியிலும் உற்ற துணையாய் இன்றுவரை இருந்து வரும் மனிதநேயமிக்க நன்கொடையாளர்களான உங்களுக்கு ஏழை புற்றுநோயாளிகளின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை சமர்ப்பிக்கின்றது.

சிலர் தேவைக்கு அதிகமாக உள்ளதை தர்மம் செய்கிறார்கள்; சிலர் தேவைகளை குறைத்துக் கொண்டு தர்மம் செய்கிறார்கள். எது எப்படியோ, ஏழை புற்றுநோயாளிகளுக்கு உதவ வேண்டும் என்ற சிந்தனையை எண்ணற்றோருக்கு ஏற்படுத்தியிருப்பதை எண்ணி ஸ்ரீ மாதா டிரஸ்ட் பெருமிதம் கொள்கிறது. அத்தகைய பெருமிதத்துடன் ஸ்ரீ மாதா டிரஸ்ட் மற்றும் நன்கொடையாளர்கள் இணைவதால் ஏழை புற்றுநோயாளிகள் சிகிச்சை காலம் முடியும் வரை **"நம்ம தர்மசாலா"**வில் உணவும், உறைவிடமும் **முற்றிலும் இலவசமாக** அனுபவிக்கிறார்கள். அதன் பயனாக ஏழை புற்றுநோயாளிகள் கேன்சர் ஆஸ்பத்திரியில் முறையான தொடர் சிகிச்சை பெறுவதால், நோயாளிகள் நோய் முற்றி இறுதி நிலைக்குச் செல்வது தடுக்கப்படுகிறது.


**நம்ம தர்மசாலா**வில் மகிழ்ச்சியுடன் மதிய உணவு உண்ணும் ஏழை புற்றுநோயாளிகள்.

**ஒரு நன்கொடையாளரின் உணர்வுபூர்வமான மடல்...**

ஆ.மகாலிங்கம், துணை ஆட்சியர் (ஓய்வு)
விருது நகர் மாவட்டம்–31.5.2019

ஐயா, தங்களது தபால் ஒன்று கிடைக்கப் பெற்றது. தாங்கள் பத்தொன்பது ஆண்டுகளாக சீரும் சிறப்புடன் நிர்வகித்து வந்த "ராஜஸ்தான் தர்மசாலா"வை கேன்சர் ஆஸ்பத்திரி நிர்வாகம் உங்களிடமிருந்து எடுத்துக் கொண்டது எனக்கு வேதனையாக இருந்தது. என்ன சொல்வது?! தங்களது சேவையை மனம் தளராமல் "நம்ம தர்மசாலா" மூலம் தொடர்வது மகிழ்ச்சியாக உள்ளது. இக்கட்டான சூழ்நிலையிலும் தாங்கள் மனிதநேய சேவையை விட்டு விடாமல் மனம் தளராமல் தொடர்ந்து நடத்திட உறுதி பூண்டுள்ளது பற்றி சொல்வதற்கு வார்த்தைகளே இல்லை. நல்லவர்களையும், நல்லவர்கள் சேவைகளையும் இறைவன் கைவிடுவதில்லை. "நம்ம தர்மசாலா" மூலம் உங்களது பணி முன்னைவிட சிறப்பாக நடக்கும். வாழ்த்துகிறேன்.

இத்துடன் என்னால் இயன்ற நன்கொடைத் தொகை ரூ.1000/–ஐ பாளீவட்டம் IOBயில் உங்களது வங்கிக் கணக்கில் செலுத்தி உள்ளேன். ரசீதினை எனது முகவரிக்கு அனுப்ப அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள [signature]



**தாய்மையே வெல்லும்..!**

புற்றுநோயால் வாடும் தன் மகனுக்கு நம்ம தர்மசாலாவில் வாஞ்சையுடன் உணவு ஊட்டும் தாய். ஸ்ரீ மாதா டிரஸ்ட் உள்ளவரை, ஏழை தாய்மார்களின் அன்பு வென்றிடுமே தவிர, புற்றுநோய் அல்ல..!

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு நம்ம தர்மசாலாவில் தஞ்சமடைந்திருக்கும் தன் கணவன் பசியாறிட குழாய் வழியே உணவு உட்கொள்ள உதவி செய்திடும் பாசமுள்ள மனைவி..!



**ஆறுதல் தரும் அன்பு..!**





**மோக்ஷம் என்பது செத்துப்போன பிறகு வேறு எந்த லோகத்திற்கோ போய் அனுபவிப்பது அல்ல.**
கை கண்ட பலனாக இந்த உலகில் இருக்கும்போதே நமக்குக் கிடைக்க வேண்டும். நல்லது செய்தால் நல்லது விளையும். இப்போதெல்லாம் கஷ்டம், சுகம் என்று அழுது கொண்டு இருந்துவிட்டு செத்துப் போன பின் மோக்ஷம் கிடைக்கிறது என்பதில் பிரயோஜனம் இல்லை.
**பிரதி பலன் கருதாது நீ செய்யும் தர்மங்களால் கிடைக்கும் ஆனந்தமே மோக்ஷம். இது இப்பிறவியிலேயே கிடைக்கும்.**
**ஜகத்குரு காஞ்சி ஸ்ரீ மஹா பெரியவர்**

Early detection ➡ Timely treatment ➡ Cures CANCER

**தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்...**

ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
ரூ.25,000/- நிதியளித்து ஒரு நாள் "நம்ம தர்மசாலா"வின் செலவினை ஏற்கலாம்
ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்
ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம் அல்லது
ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution to SRI MATHA TRUST by
CHEQUE / NEFT / CASH / M.O.
Account Name: SRI MATHA TRUST | Bank Name: INDIAN OVERSEAS BANK
Branch: Gandhi Nagar, Chennai-20.
Current A/c No.: 163502000001090 | IFSC Code: IOBA0001635

Donations to our Trust is exempted U/S.80 (G) of the Income Tax Act.
After doing this benevolent act kindly SMS your postal mailing address or kindly e-mail the donation details to enable us send our receipt.

Admin Office: 95/6, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, [Opp. to Thirukkural Unavagam] Adyar, Chennai - 600 020.
Tel: (044) 2442 0727 / (044) 4266 1687 Mobile: 9444001065 / 9381020727 9003247857 Email : vkrishnamoorthy.smt@gmail.com

Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar, Adjacent to IIT Compound, Off:Pallipattu Main Road, Chennai-113. Tel: 044 - 4509 8647

Regd. Office: 'NATHA KAMALAM' 1-A, Periyazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 600 059.

குருகுலம்

ஸ்ரீ வர்மா தெய்வீக மருத்துவ மையம்



சிறப்பு மருத்துவ முகாம்

For Appointment 044-42325018

நாள் : 02-08-2019 திங்கள் முதல் 8-09-2019 ஞாயிறு வரை
நேரம்: காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
இடம் : நெ.2A. ஏ,எஸ்.கே. நகர். ஆதம்பாக்கம், சென்னை - 88
(செயின்ட் பிரிட்டோ பள்ளி அருகில்) : 9840902281/82

குருகுலம் தெய்வீக சிகிச்சை

4500. ஆண்டுகளுக்கு முன்பு இமயமலையில் தோன்றிய ஆயுர்வேத சாஸ்திரங்களின் தெய்வீக சிகிச்சை முறைகள். இப்பொதுமுது எண்2A ஏ.எஸ.கே நகர்இ 4வது தெரு. ஆதம்பாக்கத்தில் உள்ள குருகுலம் சிறப்பு மருத்துவமனையில் அளிக்கப்படுகிறது. தீராத நாட்பட்ட நோய்களில் இருந்து பூரண குணம் பெறவும். மீண்டும் நோய்வராமல் தடுக்கவும் செய்யப்பட்ட சிகிச்சை முறையே ஆயூர்வேதா & வர்மா சிகிச்சை முறை. இந்த சிகிச்சையால் எத்தகைய கொடிய நோய்களில் இருந்தும் முழுமையாக நிவாரணம் பெறமுடிந்தது. வர்ம சிகிச்சை பாரம்பரியம் பாரம்பரியமாக இராஜ ரகசியமாக காக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்கு மருத்துவ ரீதியில் நிரூபிக்கப்பட்ட இதன் பலன்கள் அனைத்து நோய்களையும் குணப்படுத்தும். உலகப் புகழ்பெற்ற ஆயூர்வேத வர்ம சிகிச்சை நிபுணர் ஆச்சார்யா ஸ்ரீ கிருஷ்ணவர்மா அவர்களிடம் நேரடி பயிற்சி பெற்ற மருத்துவ நிபுணர்களால் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

தீராத நாட்பட்ட நோய்களால் அவதிபடுகிறீர்களா ?
இனி கவலை வேண்டாம் !



Osteoarthritis மூட்டுவலி, எலும்பு தேய்மானம், Rheumatism இரத்தவாதம், வாதகாய்ச்சல், Cervical Spondylosis முதுகு எலும்பு விலகுதல், Back Pain இடுப்புவலி. முதுகுவலி, Hemiplegia / Paraplegia பக்கவாதம், Nervous Disorder நரம்புமண்டல வியாதிகள், இதய நோய்கள், அலர்ஜி. ஆஸ்துமா, சிறுநீரகக் கல், சிறுநீரக செயலிழப்பு, தோல் அரிப்பு நோய், சோரியாசிஸ், வயிறு குடல்புண், சர்க்கரை நோய், இரத்த அழுத்தம், மனநோய், மனநல பிரச்சனைகள், தூக்கமின்மை, ஆண்மைக்குறைவு, பீனஸம், சுவாச காசநோய்,மகளீர் சிறப்பு மருத்துவம், கல்லீரல் நோய்கள், **எத்தனை வருடங்கள் ஆனதானாலும் நிவாரணம் பெறலாம். கேரள வர்மா, பஞ்சகர்மா, அக்குபஞ்சர் சிறப்பு சிகிச்சை அளிக்கப்படுகிறது**

சிறப்பு மருத்துவ முகாமில் இலவச மருத்துவ ஆலோசனை மற்றும் சிகிச்சையும் மருந்துகள் கட்டணத்தில் பத்து சதவீதம் தள்ளுபடியும் அளிக்கப்படுகிறது.நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டோர் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி பலன்பெறலாம்.

**Dr.R.Senthilkumar** MD(Acu.) Acu., Yoga & Varma Healer
**Dr.R.Rajeshkumar** MD(Acu.) Acu., Yoga & Varma Healer
**Dr.S.Meena** MD(Acu.) Acu., Yoga & Varma Healer

SHREE VARMA BIO NATURALS & SANGAMM HOSPITALS

Gurukulam: #2A, A.S.K Nagar, 4th Street, Adambakkam, Chennai - 600 088. 9840902281 /82
Head Office # 37, VOC Street, Kodambakkam, Chennai - 600 024. ☎ 044 6516 7372 / 6543 1432
Reg. Office: #12, Goubert Avenue, Beach Road, Pondicherry - 605 001. ☎ 0413 2224931 / 32 / 33
shreevarmaorg@gmail.com www.shreevarma.org




ஓம் நமோ பகவதே வாஸுதேவாயா,
ஓம் நமோ நாராயணாயா.

# ஸ்ரீமத் பகவத்கீதை

டி. சூரியநாராயணன் பகுதி - 4



**பாஷ்யம் (உரை) :** ஒரு நூலின் உட்கருத்தை எல்லோரும் புரிந்துக் கொள்ளும்படி விரிவாக விளக்குவதற்கு "பாஷ்யம்" (உரை) என்று பெயர். ஆழ்ந்த கருத்துடைய நூல்களுக்கு அநேகம்பேர் "பாஷ்யம்" எழுதுவார்கள். அப்படி பகவத் கீதைக்கு அன்று முதல் இன்று வரை மூவாயிரத்துக்கும் அதிகமானோர் "பாஷ்யம்' எழுதியுள்ளார்கள். அவற்றுள் ஆதிசங்கரர் அத்வைத சித்தாந்தத்தைப் பின்பற்றியும், ராமானுஜர் விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தைப் பின்பற்றியும், மத்வாசாரியர் துவைத சித்தாந்தத்தைப் பின்பற்றியும் எழுதியுள்ள பாஷ்யங்கள் மிகவும் உயர்ந்தவைகளாக கருதப்படுகிறது. "லோகமான்ய பால கங்காதர திலகர்" "கர்மயோகம்" என்ற தலைப்பிலும் மஹாத்மா காந்தி "அநாஸகதி யோகம்" என்ற தலைப்பிலும், ராஜாஜி அவர்கள் "கை விளக்கு" என்ற தலைப்பிலும் பகவத் கீதைக்கு எழுதிய பாஷ்யம் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு நம் நாட்டிலும், வெளி நாடுகளிலும் கீதையின் மஹிமையை பறைசாற்றியுள்ளன. இருபதாம் நூற்றாண்டில் சுவாமி சின்மயானந்தா, பக்தி வேதாந்த ஸ்வாமி, சர்வபள்ளி ராதாகிருஷ்ணன், சுவாமி சிவானந்தர், சுவாமி அரவிந்தர், வினோபா பாவே, அன்னி பெஸண்ட் அம்மையார் போன்றோர்களும் மேலும் பலரும் பகவத் கீதைக்கு பாஷ்யம் எழுதியுள்ளார்கள்.

ஒரு நூல் பல மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது என்றால் அது அந்த நூலின் சிறப்பையே

காட்டுகிறது. பகவத் கீதையில் உள்ள உயர்ந்த கோட்பாடுகளை ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டும். உலகம் பூராவும் சுமார் 100 மொழிகளுக்கும் மேலாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

"பகவத் கீதை" முதன் முதலில் 1785 ஆண்டு "சார்லஸ் வில்கிகன்ஸ்'' என்பவரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. 1823-ம் ஆண்டு Schlegel என்பவரால் லத்தின் மொழியிலும், 1826-ம் ஆண்டு Humbolt என்பவரால் ஜெர்மன் மொழியிலும், 1846-ம் ஆண்டு Lassens பிரஞ்சு மொழியிலும், 1848-ம் ஆண்டு Galanos என்பவரால் கிரேக்க மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டது.

''ஸ்ரீமத் பகவத் கிதை'' யை படிப்பதாலும், படிப்பதை கேட்பதாலும் ஏற்படும் பலன்கள் :

பகவத் கீதையை தினமும் படிக்க படிக்க புதுப் புது கருத்துக்கள் தோன்றிக் கொண்டே இருக்கும். கீதை விளக்குவது போல் வேறு எந்த நூலிலும் விளக்கங்களைக் காண இயலாது. பகவானே இதைப்பற்றி கூறுறிார்.

**அத்யேஷ்யதே ச ய இமம் தர்ம்யம் ஸம்வாதமாவயோ:/**

**ஞானயக்ஞேன தேனாஹமிஷ்ட: ஸ்யாமிதி மே மதி://** **(கீதை** 18-70)

அர்ஜுனா நம் இருவருக்குள்ளே நடந்த இந்த தர்மமான, புனிதமான, புண்ணியமான, சம்பாஷனையை எவன் ஒருவன் படிக்கின்றானோ அவன் என்னை ஞான யக்ஞத்தினால் ஆராதிப்பவன் ஆகிறான்.

அடுத்து கீதையை கேட்பவர்களைப் பற்றி கூறும்போது

**சிரத்தாவானனஸூயஸ்ச சிருனுயாதபி யோ நர:/**

**ஸோபி முக்த: சுபான் லோகான் பிராப்னுயாத் புண்ய கர்மாணாம்//**

**(கீதை** 18-71)

"அர்ஜுனா மிகுந்த சிரத்தையுடன் சிறிதும் விருப்பு வெறுப்பின்றி இதை எவனொருவன் கேட்கிறானோ அவன் எல்லா பாபங்களையும் விலகப் பெற்று புண்ணியங்கள் செய்பவர்கள் அடையும் உன்னத நிலையை அடைவான்''



ஸ்ரீ குருவாயூரப்பனின் பரம பக்தரான 'ஸ்ரீநாராயண பட்டத்திரி" தான் எழுதிய "ஸ்ரீமன் நாரயணீயத்தில்" பகவத் கீதையைக் கிழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

**கங்கா கீதா ச காயத்ரீயபி ச துலஸிகா கோபிகா சந்தனம் தத்**

**ஸாலக்ராமாபி பூஜா பரபுருஷ ததைகாதசீ நாம வர்ணா .....**

**(தசகம்** 92 - **ஸ்லோகம்** - 9)

"கலியுகத்தில் ஒரு சொட்டு கங்கை நீரும், கீதையும், காயத்திரி ஜபமும், துளசியும், கோபி சந்தனமும், ஸாளக்ராம பூஜையும், ஏகாதச விரதமும், பகவானது நாம அக்ஷரங்களும் ஆகிய இந்த எட்டும் அதிக முயற்சியின்றி பகவானுடைய அருளைப் பெருக்கவல்லது.

ஸ்ரீ சங்கர பாகவத்பாதர் தாம் அருளிய "பஜகோவிந்தம்" நூலில் கீழ்க்கண்டவாறு பாடியுள்ளார்.

**பகவத் கீதா கிஞ்சி - ததீதா**

**கங்கா - ஜல - கணிகா பீதா/**

**ஸக்ருதபி யேந முராரி - ஸமர்ச்சா**

**க்ரியதே தஸ்ய யமேந ந சர்ச்சா//**

எந்த மனிதன் தன் வாழ்நாளில் பகவத் கீதை என்ற புனித நூலின் ஒரு சிறு பகுதியையாவது படிக்கிறானோ, கங்கை நீரின் ஒரு துளியையாவது அருந்தினானோ, ஒரு முறையாவது பகவானுக்கு பூஜை செய்தாலோ அவனைப்பற்றி எமன் பேசுவதே இல்லை. அதாவது அவனுக்கு யமதண்டனை இல்லை. முக்தி அடைகிறான் என்பது கருத்து.

இப்படிப்பட்ட "பகவத் கீதை" யை நாமும் தினமும் (ஒரு ஸ்லோகத்தையாவது) படிக்க வேண்டும். அல்லது யாரையாவது படிக்கச் சொல்லி கேட்கவேண்டும். அதுமாத்திரமல்ல ராமன் வாழ்ந்து காட்டியது போல் வாழ வேண்டும். கிருஷ்ணன் உபதேசித்ததை கேட்டு அதேபோல் நடக்க வேண்டும்'' என்பார்கள். அது போல் பகவான் கீதையில் உபதேசித்ததை அறிந்து அதுபோல் வாழ்ந்துகாட்ட வேண்டும்.

தொடரும்....

**டி.சூரியநாராயணன்**

## மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்



மஹாபெரியவா முக்காலமும் அறிந்த பரமேஸ்வரன் பெரியவாளுடன் அனேகம்பேருக்கு பலவிதமான அனுபவங்கள் ஏற்பட்டுள்ளன. தம்முடைய அடியவர்களின் வாழ்வில் நடக்கப்போவதை, நடந்ததை தம்முடைய ஞானதிருஷ்டியால் அறிந்து அவர்களை கடாக்ஷித்தவர். அதே போல் பலருக்கும் எழுந்த பலவிதமான சந்தேகங்களை, யாராலும் விளக்க முடியாத சந்தேகங்களை, எல்லோரும் புரிந்துகொள்ளும் வகையில் அற்புதமாக விளக்கியுள்ளார். அப்படிப்பட்ட சந்தேகங்களையும் அதற்கு மஹாபெரியவா அளித்த அற்புத விளக்கங்களையும் மாதம் ஒரு விளக்கத்தை நம் வாசகர்களுக்காக இந்த பகுதியில் அளிக்கவுள்ளோம். இது பலருக்கும் அறிந்திருக்கும் இருப்பினும் தெரியாதவர்கள் தெரிந்து கொள்வதற்காக இந்த பகுதி.

### தமிழ்மாதங்களின் பெயர்கள் எப்படி வந்தன

**ஆவணி மாதம் :** ச்ராவணம் என்பது ச்ரவண நட்சத்திரத்தைக் குறிக்கும். முதலில் உள்ள 'ச்ர' அப்படியே தமிழில் ட்ராப் (Drop) ஆகிவிட, 'வணம்' என்பதை 'ஓணம்' என்கிறோம். அது மஹாவிஷ்ணுவின் நட்சத்திரமாதலால், 'திரு' என்ற மரியாதை சொல்லை சேர்த்து திருவோணம் என்கிறோம். அனேகமாக பௌர்ணமி ச்ராவண நட்சத்திரத்தில் வருவதால் **ச்ராவணி** எனப்படும். இதில் சம்ஸ் கிருதத்துக்கே உரிய **'ச்ர'** என்ற கூட்டெழுத்து drop ஆகி **ஆவணி** மாதமாயிற்று.

**புரட்டாசி மாதம் :** ப்ரோஷ்டபதம் என்பதற்கும் ஆஷாடம் போலவே பூர்வமும் உத்தரமும் உண்டு. பூர்வ ப்ரோஷ்டபதம்தான் தமிழில் பூரட்டாதி ஆயிற்று. 'அஷ்ட' என்பது அட்ட எனத் திரிந்தது. உத்திர ப்ரோஷ்டபதம் என்பது உத்திரட்டாதி ஆயிற்று இந்த நட்சத்திரத்தில் பௌர்ணமி ஏற்படுவதால், **'ப்ரோஷ்டபதி'** என்பது திரிந்து **புரட்டாசி** ஆயிற்று.

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**



## ஊரப்பாக்கம் ஆவணி அவிட்டம் நிகழ்ச்சி

எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் வழக்கம் போல இந்த ஆண்டும் நமது சமூகத்தின் முக்கிய நிகழ்ச்சியாகிய "ஆவணி அவிட்டம்" என்று அழைக்கப்படும் யஜீர், ரிக் உபாகர்மா ஏற்பாடுகளை ஊரப்பாக்கம் மற்றும் கூடுவாஞ்சேரி ஒருங்கிணைந்த பகுதியில் ஸ்ரீ சுப்ரமணிய சாஸ்திரி அவர்கள் இல்லமான பிளாட் எண்.27, பிரியா நகர் விரிவு, கூடுவாஞ்சேரியில் வேதபாரதி பகுதி சேவகர்கள் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி மற்றும் ஸ்ரீ சந்திரசேகர் இணைந்து மிகச்சிறப்பான வகையில் ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். மேற்படி வைபவத்தில் 15.08.2019 அன்று நூற்றுக்கணக்கான ஸ்மார்த்த மற்றும் வைணவ கிரஹஸ்தர்கள் மற்றும் பிரம்மசாரி குழந்தைகள் வைதீக முறைப்படி ஸமிதாதானம் மற்றும் ஹோமத்துடன் ஆவணி அவிட்டத்தை அனுஷ்டித்து இரண்டு பகுதியாக பூணூல் போட்டுக் கொண்டார்கள்.

மேற்படி வைபவத்தில் ஊரப்பாக்கம் ஸ்ரீ நாராயணசாமி அவர்கள் ஆவணி அவிட்டம் மற்றும் நமது சமுகத்தினர் அனுஷ்டிக்க வேண்டிய விஷயங்களையும், குறிப்பாக"வேதபாரதி" அமைப்பைப் பற்றியும், அந்த அமைப்பு நமது சமூக குழந்தைகள் நல்லொழுக்கத்திற்காக ஆற்றிவரும் சேவையையும் எடுத்துரைத்தார்கள். மேலும் அவரது உரையில் வேதபாரதி நடத்தும் "யுவஸ்ரீ" மற்றும் சந்த்யாவந்தன" வகுப்புகள் பற்றியும், ஔவைவிழா பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார்கள். தனது உரையில் "வேதபாரதி" மாத இதழ் பற்றியும், அனைவரையும் வேதபாரதி மாத இதழ் உறுப்பினர் ஆகும்படி வேண்டி உரையை நிறைவு செய்தார்.

ஸ்ரீ சுப்ரமணிய சாஸ்திரிகள் குடும்பத்தார்கள் தேநீர் உபசரிப்புடன் வைபவம் நிறைவு பெற்றது.

ஆசிரியர்.





# தர்மத்தின் குரல்

## பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்

*அத்தியாயம் 2 : மறுபிறப்பு*

### 2.14. இன்னும் சில கேள்விகள் :

சென்றமாத தொடர்ச்சி...

*4. கர்மாவிற்கும் அதற்கேற்ற அடுத்த பிறவி எத்தகையதாக இருக்கும் என்பதற்குமான தொடர்பு பற்றி இன்னும் கொஞ்சம் விளக்க முடியுமா?*

சாஸ்திரங்கள் இப்பொருளைப்பற்றி விரிவாகப் பேசுகின்றன. சில உதாரணங்களைக் கூறலாம், தன் சக்திக்கு எந்த அளவுக்கு அதிகமாக முடியுமோ அந்த அளவுக்குத்தானம் செய்வது வசதியான வாழ்க்கையைத் தரும். ஒரு குடிகாரப் பிராமணன், பன்றியாய்ப் பிறப்பான். 100 அஸ்வமேத யாகங்களைப் பூர்த்தி செய்தவன் இந்திரனாய்ப் பிறப்பான். வயதானவர்களுக்கு, குறிப்பாக, வயதான தாய் தந்தையருக்குச் சேவை செய்தவன், உயர்ந்த மதிநுட்பம் பெறுவான். தந்தையைக் கொன்றவன் பைத்தியமாய்ப் பிறப்பான். மிருகங்களுடன் சேர்க்கை செய்பவன் அலியாகவோ, பேடியாகவோ பிறப்பான். மானை மாய்த்தவன் காலொன்றை இழப்பான், நரியைக் கொன்றவன் இரு கால்களையும் இழப்பான். கிளியைக் கொன்றவன் திக்குவாயன் ஆவான். இவ்வாறு எத்தனையோ...

*5. ப்ராப்தம் என்பது என்ன?*

கர்மாக்களில் மூன்று பிரிவுகள் உள்ளன. ஸஞ்சித, ப்ராப்த, ஆகாமிய கர்மாக்கள் என்பவை அவை. ஒருவாழ்க்கைக் காலத்தில், ஒருவன் அதிக அளவிலான கர்மாக்களைச் சேமிக்கிறான். அதன் ஒரு பகுதிதான் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவன் இறப்புக்குக் காரணமான மூன்று விருத்திகளாக (வாக்விருத்தி, மனோவிருத்தி, ப்ராணவிருத்தி) அமைகின்றன. இதை ஒட்டியே அடுத்த பிறவி அமைகிறது. இவ்வாறாக, முந்தையப் பிறவியிலிருந்த வந்த கர்மா, இப்பிறவியின் ப்ராரப்தமாக அமைகிறது. மீதமுள்ள கர்மா, ஸஞ்சித கர்மா எனப்படும். இந்த பிறவியில் சேமிக்கும் கர்மாக்கள் ஆகாமியம் எனப்படம். இறக்கும் போது, இது ஸஞ்சித



கர்மாவுடன் சேர்ந்து கொள்ளும், இந்த கூட்டுக் கர்மாவின் ஒரு பகுதிதான், அடுத்த பிறவிக்காக அடித்தளமான மூன்று விருத்திகளாகின்றன. சில சமயங்களில், கர்ம பலனும் கர்மா என்று சொல்லப்படுகிறது. இப்பொழுது ஒருவன் அனுபவிக்கும் பலன்கள், ப்ராப்தம், ஆகாமியம் ஆகியவற்றின் விளைவே. இறப்பு வரும் காலத்தில், ப்ராரப்தம் முழுமையாகத் தீர்ந்துவிட்டாலும் ஆகாமியத்தின் ஒரு பகுதிதான் இப்பொழுது எடுத்துக் கொள்ளப்படுகிறது.

*6. மனிதப்பிறவிகளில் கர்மாக்களைப் பற்றித்தான் சொல்லியிருக்கிறீர்கள், மிருகங்களின் கர்மாக்களைப் பற்றி...*

மிருகங்களுக்கு ஆகாமியக் கர்மாக்கள் இல்லை. மிருகமாகப் பிறவியெடுத்த ஜீவாத்மா தான் மிருகமாகப் பிறப்பதற்குக் காரணமான பாபகர்மாவை மட்டும் தான் தீர்த்துக் கொள்கிறது. அதாவது, அது, தன் ப்ராரப்த கர்மாவை மட்டும்தான் அனுபவிக்கிறது. ஒரு புலி, ஒரு பசுவையோ அல்லது கங்கையில் இருக்கும் ஒரு மீனையோ கொல்வதால், எந்த பாபத்தையும் சம்பாதிக்காது கங்கையில் எப்பொழுதும் வசிப்பதால், புண்ணியத்தையும் சம்பாதிக்காது இந்த கர்மாவைத் தீர்த்துக் கொண்டபின், அவை மனிதர்களாக மறுபிறவி எடுக்கின்றன.

தொடரும்......

உ
குருவே சரணம்

**வேதபாரதி**

(பாரதப் பண்பாட்டு அமைப்பு)

**புதுச்சேரி**

**வேதபாரதி ஆண்டுவிழா நிகழ்ச்சிகள்**

**நாள்:**
*20.10.2019, ஞாயிற்றுக்கிழமை*
*காலை 9.00 மணி முதல்*
*மாலை 6.00 மணி வரை*

**இடம்** : ஸ்ரீ சங்கர வித்யாலயா, ECR Road, புதுவை

- குழந்தைகளின் தனித்திறமை
- பெண்மையைப் போற்றுவோம்
- சிறப்பு சொற்பொழிவு
- பரிசளிப்பு, பாராட்டு

தொடர்புக்கு : **9443337023 / 9443284439**

## எங்கள் குலசாமி

குல தெய்வ வழிபாடுகள் குறைந்து கொண்டு வருகின்றது என்று ஒரு பொதுவான பேச்சும் வருத்தமும் இருக்கிறது எனக்கு என்னமோ இந்த வருத்தம் பிராமண குடும்பங்களுக்குத்தான் பொருந்தும் என்று தோன்றுகிறது. இது ஒரு வருத்தம் மட்டும் இல்லை. வேறு பல வருத்தங்களும் நிறைந்த ஒரு பிரிவாக பிராமண குலம் ஆகிக்கொண்டிருக்கிறது. இந்தக் கட்டுரை இந்தப்பிரிவின் வருத்தத்தைப் பற்றி இல்லை. மாறாக பிராமணர் அல்லாதவர்கள் தங்களது குலசாமியை வழிபடும் அழகை, சிரத்தையை, பக்தியை, கடைபிடிக்கும் பாரம்பர்யத்தைப் பற்றியது. எனக்குத் துளிகூட சம்மந்தமே இல்லாத ஒரு எல்லை தெய்வத்தின் ஆலயத்தில் நிகழ்ந்த குல தெய்வ வழிபாட்டினை இரண்டாவது முறையாக நான் நேரில் அனுபவித்த சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்கிறேன்.

### சிதம்பரம் அருகில் இருக்கும் உசுப்பூர் கிராமம் தெய்வம் : அய்யனார்.

**பரதேசியப்பன் - சென்னியம்மாள், பாவடைராயர் பிரதான தெய்வங்கள் :**



வெட்ட வெளியில், ஆள் அரவங்கள் அதிகமற்று அமைதியாக வீற்றிருக்கும் தெய்வங்கள் சின்னைய்யா - பெரியய்யா என்று மிகப் பெரிய கம்பீரமான உருவங்கள். ஐயனாருக்குத் துணையாக வந்தவர்களாம். பெரிய யானை, பெரிய குதிரை ஆகியவையும் நம்மை வரவேற்கின்றன. அடர்ந்த மரங்கள் சூழ்ந்து அபாரமான காற்று நம்மை பரவசப்படுத்தியது. கிராமிய திரைப்படங்களில் தான் நான் இத்தகைய கோவில்களைப் பார்த்திருக்கிறேன். கும்பகோணம் சாக்கோட்டையைச் சேர்ந்த சுபாஷ் என்ற அனுபவஸ்தரிடம் பேசி விவரங்கள் பெற்றேன்.



அம்பது வருஷமா, வருஷத்துக்கு ஒருமுறை வருவோம். அண்ணன், தம்பி குடும்பங்கள் எங்கிருந்தாலும் ஒரு நாள் எல்லோருமா கூட்டுக் குடும்பமாத்தான் வந்து, அபிஷேகம், அர்ச்சனை, அலங்காரம், பொங்கல் வைக்கிறது. மாவிளக்கு போடறதுன்னு பரம்பரை பரம்பரையாக செய்துகிட்டு வந்துகிட்டு இருக்கோம். ஒரு குறைவும் ஐயனார் வைக்கலையம்மா என்று நெகிழ்ச்சியுடன் பேசுகிறார்.

பதினெட்டு சாஸ்தாவுல இவரும் ஒருத்தர்னு எங்க அண்ணன் மோகன்தாஸ் காந்தின்னு பேரு, 70 தடவைக்கு மேலே சபரிமலைக்கு போயிட்டு வந்தவர். இந்த உசுப்பூர் ஐயனார் பாடலை அங்க பாடுகிறார்களாம். அவங்க பாடற பாட்டுல உசுப்பூர் ஐயனார் பெயரும் வரும்னு ரொம்ப பெருமையா சொல்லுவார்.

பரதேசியப்பன் - சென்னியம்மாள், சைவ சாமி. இவங்களுக்கு வெண் பொங்கல், சர்க்கரை பொங்கல், மாவிளக்கு ஆகியவைதான் படைப்போம். பக்கத்துல பாவாடைராயன், அரியமுத்து, அரியநாச்சி ஆகியோருக்கு கறிசாப்பாடு, சாராயம் எல்லாம் உண்டு. மீனவர்கள் சிலரும் இங்கவந்து இவங்களை குலசாமியா கும்பிடுவாங்க. அவங்க தில்லை, மகேந்திரப்பள்ளி, புதுப்பட்டினம், பழையாறு பக்கத்தை சேர்ந்தவங்க பெருங்கூட்டமாவந்து பெரிய அளவுல பந்தல் போட்டு அமர்களமா சாமி கும்பிடுவாங்க. இங்க இன்னொரு விசேஷம் என்னவென்றால், சிதம்பரம் தீக்ஷதர்களுக்கும் பரதேசியப்பன்தான் குலதெய்வம். அவங்க தை மாசம் வந்து விமர்சையா செய்வாங்க. அபிஷேகம் மட்டும் இங்குள்ள பூசாரிதான் செய்வார். அர்ச்சனை அவங்களே செய்துக்குவாங்க, அம்மா பேட்டை அக்ரஹார ஐயர்களுக்கும் இதுதான் குலசாமி. ஆத்தை கடந்தா அம்மாபேட்டை. ஆனா இப்ப அந்த அக்ரஹாரத்துல ஒன்று இரண்டு ஐயர் குடும்பம்தான் இருக்கு. ஆனா அவங்க பேசிவச்சிக்கிட்டு ஒண்ணா கூட்டமா வந்து

கும்பிடுறதை நாங்க பார்த்திருக்கோம். அபிஷேகத்தை இவங்க பண்ணுவாங்க, அர்ச்சனையை பூசாரிதான் பண்ணுவாரு.

பரதேசியப்பன் எங்களுக்கு எத்தனையோ செஞ்சிருக்காருங்க. எந்தக் கவலை வந்தாலும் இவருக்கு சொல்லிட்டோம்னா, பஞ்சா பறந்து போயிடும். அதை அனுபவிச்சவங்களுக்குத்தான் தெரியும் என்று முடித்தார்.

நாங்கள் போயிருந்த தினத்தில், இரண்டு மூன்று குடும்பங்கள் வந்திருந்தனர். ஒவ்வொரு குடும்பத்திலும் மூன்று தலைமுறை மக்கள் வந்திருந்தனர். அபிஷேகத்திற்கும், அலங்காரத்திற்கும், அர்ச்சனைக்கும், மாவிளக்கிற்கும், பொங்கல் வைப்பதற்கும் எடுத்து வந்திருந்த பூஜைப்பொருள்களை தாம்பாளங்களில் எடுத்து வைத்திருந்த விதரணை இருக்கிறதே அதனை விவரிக்கவும் வார்த்தைகள் போதாது, பார்ப்பதற்கும் கண்கள் இரண்டு போதாது. கிராமத்திய மனிதர்களிடம் கடவுளின் மீது பக்தியும் பயமும் சம அளவில் கலந்து இருப்பதாகத்தான் பட்டது. பக்தியும் பயமும் இருப்பதினால் தான் செயல்களிலும் அதீத அக்கறையும் நேர்த்தியும் இருந்தது. நாம் ஏன் இப்படி இல்லை. ஏனோதானோ என்று எல்லாவற்றிலும் அலட்சியப் போக்குடன் இருக்கிறோமே என்று நினைக்கத் தோன்றியது அந்த எளிய மனிதர்களுக்கு சம்ஸ்க்ருத மந்திரங்கள் தெரியவில்லை. **ஆனால் ஆத்மார்த்தமான, அசைக்க முடியாத தெய்வ பக்தி இருக்கிறது.**

அவர்களுக்கு இருக்கும் "பயபக்தி" நமக்கு மிகவும் தேவை. சிந்திக்கவும்.

என்ன கொடுப்பினையோ தெரியவில்லை. அடுத்த வாய்ப்பும், திருவாரூர் அருகே, குறும்பல் என்கிற கிராமத்தில் குடிகொண்டுள்ள, இன்னொரு குடும்பத்தின் குலதெய்வமான ஐய்யனாரை தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன். அங்கு ஒரு அற்புதமான மனிதரை சந்தித்தேன். காத்திருங்கள் அறிமுகப்படுத்துகிறேன்.

**- டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்**



## பாண்டிச்சேரி ஸம்ஸ்க்ருத தினம்



புதுவை வேதபாரதி மூலமாக கடந்த 17.08.2019 அன்று காலை ஸம்ஸ்க்ருத தினம் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சுமார் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இதில் 20க்கும் மேற்பட்ட பெரியோர் மற்றும் சிறியோர் என அனைத்து வயதினரும் கலந்து கொண்டு ஸ்லோகங்களும், கீர்த்தனைகள், கட்டுரைகள் போன்ற பல நிகழ்வுகள் செய்தனர். வேதபாரதியின் மூலமாக அனைவருக்கும் பரிசுகளும் வழங்கப்பட்டன. மேலும் இவ்விழாவை சிறப்பிப்பதற்காக புதுச்சேரி பல்கலை கழகத்தின் ஸம்ஸ்க்ருத துறையில் பேராசிரியராக பணிபுரியும் டாக்டர்.உ.வே.தரணீதரராசார்யர் அவர்கள் சிறப்பு விருந்தினராக வந்து ஸம்ஸ்க்ருதத்தின் மஹிமையை பற்றி எடுத்துரைத்தும் பரிசுகள் வழங்கியும் விழாவை சிறப்பித்தார். இவ்விழா வேதபாரதியின் குழுவினர் மூலமாக பெரும் விழாவாக கொண்டாடப்பட்டது என்றால் மிகையாகாது. மேலும் புதுச்சேரி வெங்கட்டா நகரில் ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிற்றுகிழமைகளில் காலை, மாலை இரு வேலைகளிலும் ஸம்ஸ்க்ருதம் மற்றும் வேத வகுப்புகள் நடைபெற்று வருகிறது. இதில் 50க்கும் மேற்பட்டோர் படித்து வருகின்றனர் என்பதை குறிப்பாக தெரிவித்துக் கொள்கிறோம். நன்றி.

ஆசிரியர்.





## 2019 - ஔவை விழா நிகழ்ச்சி

வேதபாரதி ஔவை விழா - 2019 சிறப்பாக நடத்திட 20.07.2019 அன்று தாம்பரம் ஸ்ரீ சங்கர வித்யாலயா பள்ளியில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அதன் படி ஔவை விழா கமிட்டி 2019 அமைக்கப்பட்டு கீழ்க்கண்ட அன்பர்கள் , ஆசிரியப்பெருமக்கள், குழு உறுப்பினர்களாக இருந்து விழா சிறப்புற நடக்க ஏற்பாடுகள் செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது. ஔவை விழா கமிட்டி உறுப்பினர்கள் பிரதி வாரம் சந்தித்து ஏற்பாடுகள் குறித்தும், தொடர் நடவடிக்கைகள் குறித்தும் வாட்ஸ்அப் மூலம் தெரிவித்துக் கொண்டு மிகச் சிறப்பாக விழாவினை நடத்திக் கொடுத்தார்கள். சிறப்பு சந்திப்பு கூட்டங்கள் அலுவலக நாட்களில் ஏற்பாடு செய்ய நேர்ந்ததால் சிலர் பங்கெடுக்க இயலவில்லை. ஆனாலும் மிகுந்த ஒற்றுமையுடன் இருந்து தனது உளமார்ந்த நல்ல கருத்தொற்றுமை கொண்டு பணியாற்றினார்கள். விழாவில் கலந்து கொண்ட குழந்தைகளிடமும், பெற்றோர்களிடமும், சிறப்பு விருந்தினர்களிடமும் வேதபாரதிக்கு நன் மதிப்பை பெற்றுக் கொடுத்தார்கள். எல்லாம் வல்ல இறைவன் காலம் பாராமல் பணியாற்றிய குழு உறுப்பினர்களுக்கும், ஒத்துழைப்பு நல்கிய நல் உள்ளங்களுக்கும் எல்லா நன்மைகளையும் கொடுக்க பிரார்த்திக்கிறோம்.

**ஔவை விழா குழு உறுப்பினர்கள் :**

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ ராமசுப்ரமணியம் | - | தாம்பரம் | விழா பொறுப்பாளர்கள் |
| ஸ்ரீ நாராயணன் A.S. | - | தாம்பரம் | |
| ஸ்ரீமதி சுதா சுந்தரம் | - | SSVS | |
| ஸ்ரீமதி தீபா | - | SSVS | |
| ஸ்ரீமதி ஸ்ரீமதி | - | SSVS | |
| ஸ்ரீமதி வசந்தி | - | SSVS | |
| ஸ்ரீ விஸ்வநாதன் | - | வேளச்சேரி | |
| ஸ்ரீ ஸ்ரீகாந்தன் | - | வேளச்சேரி | |
| ஸ்ரீ சங்கர் | - | நங்கநல்லூர் | |
| ஸ்ரீ நாராயணன் | - | புழுதிவாக்கம் | |
| ஸ்ரீ சௌபாக்யா ரமேஷ் | - | பள்ளிக்கரணை | |
| ஸ்ரீ நரேந்திரன் | - | குரோம்பேட்டை | |
| ஸ்ரீ சந்திரசேகர் | - | ஊரப்பாக்கம் | |
| ஸ்ரீ சுப்ரமணியன் | - | நங்கநல்லூர் | |

**ஔவை விழா கட்டுரை அடுத்த இதழில் வெளிவரும்.**

அன்புடன் செயலாளர்.



உ
குருவே சரணம்

### வேதபாரதி

(பாரதப் பண்பாட்டு அமைப்பு)

## ஆன்மீகச் சொற்பொழிவு

நாள் :
**26,27,28 செப்டம்பர் 2019**
வியாழன், வெள்ளி, சனிக்கிழமை வரை

இடம் :
**ஸ்ரீ அட்சயா மஹால்**
தில்லை கங்கா நகர், நங்கநல்லூர்

நேரம் : **மாலை 6.30 மணி முதல் 8.00 மணி வரை**

**வழங்குபவர்கள்:**

**ஸ்ரீ ரமண பாரதி சைதன்ய ஜி**
**(ஸ்ரீ க்ருஷ்ண ஜகந்நாதன் ஜி)**

**அனைவரும் வருக! வருக!!**

தொடர்புக்கு
**8667416781 / 7397291043**

உ
குருவே சரணம்

### வேதபாரதி

(பாரதப் பண்பாட்டு அமைப்பு)

## ஊரப்பாக்கம்
## அந்தணர் சங்கமம் / யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கம்

**நாள்:**
6.10.2019, ஞாயிற்றுக்கிழமை
காலை 10.00 மணி முதல்
மாலை 6.00 மணி வரை

- அனுஷ்டானங்கள்
- பூஜை முறைகள்
- குழந்தை வளர்ப்பு
- முதியோர் நலன்

**இடம்** : பின்னர் அறிவிக்கப்படும்.

தொடர்புக்கு : **9444132170 / 9551923310**

**ஸ்ரீ மஹாமேரு மண்டலி**

## 16.07.2019 குருபூர்ணிமா விழா நிகழ்ச்சி

16.07.2019 அன்று குருபூர்ணிமா விழா நாடு முழுவதும் ஆன்மீக அன்பர்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ தத்தாத்ரேயர் வழிவந்த ஸ்ரீ சதாஸிவ ப்ரஹ்மேந்திர ஸரஸ்வதி, ஸ்ரீ ஸ்வயம்பிரகாச ப்ரஹ்மேந்திர ஸரஸ்வதி, ஸ்ரீ கிருஷ்ணானந்த ப்ரஹ்மேந்திர ஸரஸ்வதி, ஸ்ரீ அபயானந்த ப்ரஹ்மேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் உலக நன்மைக்காக ஆன்மீக முறையில் அரிய பெரிய செயல்களைச் செய்து பொதுமக்களின் போற்றுதலுக்கு உரியவர்களாக வாழ்ந்தனர். இந்த குரு பரம்பரையில் வந்துள்ள ஸ்ரீஸ்ரீஸ்ரீ மதுராம்பிகானந்த ப்ரஹ்மேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் சென்னையில் ஸ்ரீ மஹா மேரு மண்டலி என்ற அமைப்பை உருவாக்கி ஆன்மீகத் தொண்டாற்றி வருவதுடன் ஸ்ரீ வித்யா உபாசனையைப் போதித்து வருகிறார்.

குருமார்களைப் போற்றி வழிபடும் விதமாக 15 மற்றும் 16.07.2019 அன்று நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் ஸ்ரீ தத்தகிரி, ஸ்ரீ தத்தாஸ்ரமம் மற்றும் சேந்தமங்கலம் பச்சடையான்பட்டி புதூரில் அமைந்துள்ள அருணாஸ்ரமத்தில் ஸ்ரீ மஹா மேரு மண்டலியின் ஸ்தாபகர் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மதுராம்பிகானந்த ப்ரஹ்மேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் முன்னிலையில் மண்டலியைச் சார்ந்த சிஷ்யர்கள் சேர்ந்து ஸ்ரீ குருபூர்ணிமா விழாவை சிறப்பாக நடத்தினார்கள்.. குருமார்களுக்கு சிறப்பு பூஜைகளும் அன்னதானமும் அளித்தார்கள். பொதுமக்கள் கலந்து கொண்டு ஆசிகளைப்பெற்றார்கள். குருபூர்ணிமா விழா சிறப்பாக நடைபெற்றது.

ஆசிரியர்.



G. SIVAGAMASUNDARI
99940 89133




N. GURUMURTHY
99940 89140

**SRI SASTHA CATERING**



*We are Supplying Meals,
Tiffin & Marriage Sear
Variation in Order*



14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.

**திருக்கோயில் உழவாரப்பணி மன்றம்**

14, பாலசுப்ரமணியர் கோயில் தெரு,
லட்சுமி நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: **9445121080, 7200935145**

ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகள் மகம் நட்சத்திரத்தை முன்னிட்டு எல்லா மாதமும் வேளச்சேரி **அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயிலில் திருவாசகம் முற்றோதுதல்** நமது மன்றத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நடைபெறும் நாள் **26.09.2019 வியாழக்கிழமை நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னம்பாலிப்பு நடைபெறும்.** அனைவரும் கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**திருக்கோயில் உழவாரப்பணி**

**01.09.2019, ஞாயிற்றுக்கிழமை**
அரசூர் (வழி பொன்னேரி) கிராமத்தில் அமைந்துள்ள
**அருள்மிகு சௌந்தரவல்லி அம்பாள் உடனுறை
திருவாலீஸ்வரர் திருக்கோயிலில்**

உ

குருவே சரணம்

# வேதபாரதி

(பாரதப் பண்பாட்டு அமைப்பு)

# ஆன்மீகச் சொற்பொழிவு

நாள் :
**26,27,28 செப்டம்பர் 2019**
வியாழன், வெள்ளி,
சனிக்கிழமை வரை

இடம் :
**ஸ்ரீ அட்சயா மஹால்**
தில்லை கங்கா நகர்,
நங்கநல்லூர்

நேரம் : **மாலை 6.30 மணி முதல் 8.00 மணி வரை**

**வழங்குபவர்கள்:**

## ஸ்ரீ ரமண பாரதி சைதன்ய ஜி

**(ஸ்ரீ க்ருஷ்ண ஜகந்நாதன் ஜி)**

**அனைவரும் வருக! வருக!!**

தொடர்புக்கு

**8667416781 / 7397291043**